## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, B.A.,L.L.M.,Dip., in (J.J & J.P).,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.1 நாள் 09.10.2025

| SC. No. | 172/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தர் | த/பெ. | A. காசிநாதன். |
| வயது | 41/25. | தொழில் | தலைமை காவலர், |
| கிராமம் | [illegible] | தாலுக்கா | சிதம்பரம். |

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது பாலையூர் காவல் நிலைய தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 வருடம் முதல் 2023 வரை பொறையார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது கடந்த 12.10.2022 அன்று மாலை சுமார் 17.00 மணியளவில் நெண்டலாறு சோதனை சாவடியில் காவல் ஆய்வாளருடன், நானும், உதவிஆய்வாளர் மகாலெட்சுமி ஆகியோர் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தோம். அப்போது TN 45AJ 3768 என்ற பதிவெண்ட கொண்ட வெள்ளை நிற டாட்டா இண்டிகா கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது மேற்படி வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது. பின்னர், மேற்படி வாகனத்தை குட்டிஆண்டியூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்று அந்த வாகனத்தை நிறுத்தியபோது அந்த காரின் ஓட்டுநர் ஓடிவிட்டார். அந்த காரினை சோதனை செய்தபோது 12 சாக்கு மூட்டைகள் இருந்தது. அதை பிரித்து பார்த்தபோது 100 மி.லி பிடிக்கக்கூடிய பாலித்தீன் பாக்கெட்டுகளில் 100 மி.லி அளவுள்ள பாண்டி சாராயம் ஒரு மூட்டையில் 300 பாக்கெட்டுகள் இருந்தது. மொத்தம் 3600

CJM, MAYILADUTHURAI.

பாக்கெட்டுகள் இருந்தது. அந்த பாக்கெட்டினை பிரித்து முகர்ந்து பார்த்தபோது ஒரு விதமான விஷ நெடியுடன் கண் எரிச்சல் இருந்தது. 17.30 மணிக்கு காவல் ஆய்வாளர் காரையும், அதில் கடத்தி வரப்பட்ட பாண்டி சாராயத்தை அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் கைப்பற்றுதல் மகசரில் என் முன்னிலையிலும், அறிவழகன் முன்னிலையிலும் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1** ஆகும். மேற்படி, சாராயத்தில் மாதிரிக்காக சுமார் 750 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மி.லி வீதம் காவல் ஆய்வாளர் மாதிரிக்காக சேகரித்து, காவல் ஆய்வாளர் சீல் வைத்தார். மீதமிருந்ததை சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்துவிட்டார். அந்த இடத்தில் அழிப்பு மகசர் தயார் செய்தார். அதில் நானும், அறிவழகனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அழித்தல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த அழித்தல் மகசர் **அ.சா.ஆ.2** ஆகும். சம்பவ இடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அதில் நானும், அறிவழகனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர், காவல் நிலையம் வந்து பொறையார் காவல் நிலைய குற்ற எண். 257/2022 பிரிவுகள் 4 (1) (aaa) 4(1-A) Act -ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

காரில் வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. மகசர், அழிப்பு மகசர், பார்வைமகசர் ஆகியவற்றை யார் எழுதினார் என்றால் உதவி ஆய்வாளர் எழுதினார். எழுதப்பட்ட ஆவணங்களில் தான் கையெழுத்திட்டேன். தடயங்கள் கைப்பற்றப்படும்போது கலால் அதிகாரி முன்னிலையிலோ அல்லது வேறு அதிகாரி முன்னிலையிலோ கைப்பற்றப்பட்டு சான்று பெறப்பட்டதா என்றால் இல்லை. தனிநபர் சாட்சிகள் முன் வராததால் நாங்கள் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொல்லியுள்ள நிலையில் யார் யார் தனிநபரிடம்சாட்சியாக அழைத்தார்கள் யார் சாட்சியாக இருக்க மறுத்தார்கள் என்ற விபரத்தை விசாரணையில் சொல்லியுள்ளேனா

CJM, MAYILADUTHURAI.

சாட்சியம் அளிக்க மறுத்த தனிநபர் பற்றிய விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்திட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்தவொரு ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றாலும், என் முன்னிலையில் தடயபொருள் கைப்பற்றப்படவும் இல்லை, அழிக்கப்படவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் எங்கள் காவல் நிலையத்தின் ஆய்வாளர் என்று சொன்னால் சரிதான். அவர் பதிவு செய்த பொய்யான வழக்கிற்கு அவருக்கு கீழ் பணியாற்றும் என்னை சாட்சியம் அளிக்க அறிவுறுத்தியதின் அடிப்படையில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

முன்னிலை :– திருமதி. எஸ். தமிழ்செல்வி, B.A.,L.L.M.,Dip., in (J.J & J.P).,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
மயிலாடுதுறை.

அ.சா.2

நாள் 09.10.2025

| SC. No. | 172/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | கண்ணதாசன் | த/பெ. | கலியமூர்த்தி |
| வயது | 42/25 | தொழில் | தலைமை காவலர் |
| கிராமம் | இளையாம்புத்தூர் | தாலுக்கா | சீர்காழி |

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது பெரம்பூர் காவல் நிலைய தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.10.2022 அன்று நெண்டலாறு சோதனை சாவடியில் பணியில் இருந்தபோது சுமார் மாலை 5.00 மணியளவில் பொறையார் காவல் நிலைய ஆய்வாளருடன், உதவிஆய்வாளர் மகாலெட்சுமி, தலைமை காவலர் சுந்தர் ஆகியோர் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தார்கள். அன்று நெண்டலாறு சோதனை சாவடியில் நானும், தலைமைகாவலர் அறிவழகனும் பணியில் இருந்தோம். வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தபோது TN 45AJ 3768 என்ற பதிவெண்ட கொண்ட வெள்ளை நிற டாட்டா இண்டிகா கார் காரைக்காலிருந்து பெறையார் நோக்கி வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்டபோது மேற்படி வாகனம் நிற்காமல் சென்றுவிட்டது. நான் மட்டும் சோதனை சாவடியில் இருந்தேன். காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமை காவலர்கள் சுந்தர் மற்றும் அறிவழகன் மேற்படி காரை பின் தொடர்ந்து சென்றார்கள். அதன் பிறகு,

CJM, MAYILADUTHURAI.

காரினை பிடித்துவிட்டதாக சொன்னார்கள். என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நெண்டலாறு சோதனை சாவடியில் சி.சி.டி.வி கேமராக்கள் பொறுத்தப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வாகன தணிக்கை செய்யும்போது செக்போஸ்ட்டில் உள்ள பேரிகாட் இறக்கி விட்டு தடுத்துதான் சோதனை செய்வோம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை சொன்ன விபரத்தை ஆய்வாளர் விசாரிக்கும்போது சொன்னேன். குட்டிஆண்டியூரில் என்ன சம்பவம் நடந்தது என்ற எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/10/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.